

# GSP+ மற்றும் இலங்கை

ஜனவரி 2017

DEMOCRACY
REPORTING
INTERNATIONAL



# GSP+ என்றால் என்ன?

ஐரோப்பிய ஒன்றியத்தின் விருப்பத் தெரிவுகளுக்கான பொதுமைப்படுத்தப்பட்ட திட்டம் (GSP) என்பது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் தமது உற்பத்திகளை குறைந்தளவு அல்லது வரிகள் எதுவும் செலுத்தாமல் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்வதற்கு வசதியளிக்கும் வர்த்தக உடன்படிக்கை ஆகும். வறுமையை ஒழிப்பதற்கு, ஆட்சிமுறையை மேம்படுத்துவதற்கு மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கான செயற்பாட்டை ஊக்குவிப்பதற்கும் உதவுவதற்கும் GSP திட்ட நிகழ்ச்சிகளை ஐரோப்பிய ஒன்றியம் வழங்குகின்றது.

விருப்பத் தெரிவுகளுக்கான பொதுமைப்படுத்தப்பட்ட திட்டம் பிளஸ் (GSP+) என்பது ஏற்கனவே GSP இனால் பயன் பெறும் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு மேலதிக வர்த்தக ஊக்குவிப்புக்களை வழங்கும் GSP திட்டத்தின் விசேட அம்சமாகும். நிலையான GSP+ சலுகை திட்டத்தினைவிட பரந்தளவு சந்தை அணுகும் வசதியை வழங்கும் இலக்குடன், 7,200 இற்கும் மேற்பட்ட உற்பத்திகளுக்கு சலுகைகளற்ற அணுகும் வசதியை பயன்பெறும் நாடுகளுக்கு வழங்கும் வகையில் ஐரோப்பிய ஒன்றியம் GSP இனை அறிமுகப்படுத்தியது.

இந்த சலுகைகளுக்கு பிரதியீடாக, சலுகையைப் பெறுகின்ற நாடுகள் மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், சுற்றுச் சூழல் மற்றும் நல்லாட்சி ஆகிய தளங்களில் பிரதான சர்வதேச பிரகடனங்களினை ஏற்புறுதி செய்தல் மற்றும் வினைத்திறன் மிக்க வகையில் நடைமுறைப்படுத்தல் வேண்டும். 2014 ஆம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்ட GSP+ ஆனது தற்போது, கடுமையான கண்காணித்தல் பொறியமைப்புக்களையும், அதன் பொருட்டு சிவில் சமூகத்திற்கான முக்கியமான வகிபாகத்தையும் உள்ளடக்கியுள்ளது. இந்த திட்டத்தில் மேலதிகமாக அரசு சாராத செயற்பாட்டாளர்கள் பார்வையாளர்களாக இருத்தலானது கண்காணித்தல் பொறியமைப்பினை மேலும் வெளிப்படையானதாக மற்றும் குறிக்கோள் மிக்கதாக மாற்றுகின்றது.

# GSP+ இன் நிபந்தனைகள்

நாடுகள் GSP+ இனைப் பெற்றுக் கொள்வதற்கு, பிரவேசிப்பதற்குத் தேவையான நிபந்தனைகளை எட்டுவதனை அந்த நாடுகள் வெளிப்படுத்த வேண்டும்:[1]

- "பலவீனமான" நாடாக இருத்தல் வேண்டும், அதாவது, மூன்று தொடர்ச்சியான வருடங்களில் அதிக வருமானம் அல்லது உயர்-நடுத்தர வருமானம் பெறும் நாடாக உலக வங்கியினால் வகை பிரிக்கப்படாத நாடு (வேறு விதமாக கூறுவதாயின், நிலையான GSP வரிச்சலுகை பெறும் நாடு).

- ஐரோப்பிய ஒன்றியத்திற்கான அதன் இறக்குமதிகள் அதிகளவில் வெகுசில உற்பத்திகளாக இருத்தல் வேண்டும் (மொத்த GSP- உள்ளடக்கப்பட்ட இறக்குமதிகளின் பெறுமதியின் 75% வீதத்திற்கு அதிகமாக ஐரோப்பிய ஒன்றியம் பிரதிநிதித்துவம் செய்வதாக GSP - என்ற உள்ளடக்கப்பட்ட இறக்குமதிகளின் ஏழு பிரதான பிரிவுகள்). ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் குறைந்தளவு இறக்குமதியும் இருத்தல் வேண்டும் (ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் அதன் GSP - உள்ளடக்கப்பட்ட இறக்குமதிகள் அனைத்து பயனாளிகளிடமிருந்தும் ஐரோப்பிய ஒன்றியத்தின் மொத்த GSP - உள்ளடக்கப்பட்ட இறக்குமதிகளின் பெறுமதியில் 2% குறைவாக).

- மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் உரிமைகள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, மற்றும் நல்லாட்சி தொடர்பான 27 சர்வதேச சாசனங்களையும் குறித்த நாடானது, குறித்த சாசனங்களால் தடைசெய்யப்பட்ட அல்லது சாசனங்களின் குறிக்கோள் மற்றும் நோக்கத்திற்கு பொருந்தாத எவ்வித ஒதுக்கீடுகளும் இன்றி, ஏற்புறுதி செய்து, மற்றும் வினைத்திறன் மிக்க வகையில் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

- குறித்த சாசனங்களால் விதிக்கப்படும் கண்காணித்தல் நடைமுறைகள் மற்றும் தேவைகளுக்கு நாடானது இணங்க வேண்டும். அத்துடன், ஐரோப்பிய ஆணைக்குழு தலைமையிலான GSP+ தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்பு நடைமுறைகளுக்கும் அந்த நாடு இணங்க வேண்டும்.



# GSP+ இற்கு விண்ணப்பித்தல்

GSP+ இல் இணைவதற்கு நாடொன்று கோரியதும், அதன் தொடர்ச்சியான மதிப்பீட்டுச் செயற்பாட்டிற்கு 10 மாத காலம் எடுக்கும். விண்ணப்பத்தினை பரிசீலிப்பதற்கு மற்றும் பிரதான தேவை தகைமைகள் பூர்த்தி செய்யப்படுமாயின் GSP+ இனை வழங்குவதற்கு ஆலோசிப்பதற்கும் ஐரோப்பிய ஆணைக்குழுவிற்கு ஆறு மாதங்கள் வரை தேவையாக இருக்கும். அதன் பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்தின் பேரவை மற்றும் ஐரோப்பிய பாராளுமன்றத்திற்கு ஆணைக்குழுவிற்கு முன்வைக்கப்பட்ட பிரேரணை குறித்து கவனம் செலுத்துவதற்கு இரண்டு மாத காலம் உள்ளது.[2]

- GSP+ இல் இணைவதற்கு நாடு கோருதல்.
- விண்ணப்பத்தை ஐரோப்பிய ஆணைக்குழு பரிசீலிக்கும்: முடிவு சாதகமாக இருப்பின், இணைப்பினை ஆணைக்குழு பிரேரிக்கும்.
- ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பேரவை என்பன ஆணைக்குழுவின் பிரேரணையை மீளாய்வு செய்து, அனுமதிப்பதற்கு தீர்மானம் எடுக்கும்.

# கண்காணித்தல் செயற்பாடு

GSP+ பயனாளியாக நாடு மாறியதன் பின்னர், இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை மீண்டும் மீண்டும் நடைபெறும் கண்காணித்தல் செயற்பாடு ஒன்றுக்கு அந்த நாடு கடப்படும். ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்ட இரண்டு கருவிகளை செயற்பாடு உள்ளடக்கும். புள்ளிப் பட்டியல் மற்றும் பயனாளி அதிகார சபைகளுடன் தொடர்ந்து செல்லும் உரையாடல் ஒன்று என்பவையே அந்த இரண்டு கருவிகளுமாகும்.

## புள்ளிப் பட்டியல்

சர்வதேச கண்காணித்தல் அங்கங்களினால் அடையாளம் காணப்பட்டவாறு 27 சாசனங்களில் ஒவ்வொன்றினதும் சம்பந்தப்பட்ட குறைபாடுகள் தொடர்பில் தகவல்களை பரிமாறிக் கொள்ளும் ஒரு முறைமை "புள்ளிப் பட்டியல்" ஆகும். பயனாளி நாடு ஒன்று GSP+ இல் இணையும் போது, GSP+ உறுதி மொழிகளுடன் பயனாளி நாட்டின் இணக்கத் தன்மை குறித்து மதிப்பீடு ஒன்றினை ஆணைக்குழு பூர்த்தி செய்யும் (முதலாவது -புள்ளிப் பட்டியல்).

புள்ளிப் பட்டியலில் உள்ள விடயங்களின் பட்டியலானது வருடாந்தம் புதுப்பிக்கப்படும். அத்துடன், 1) சாசனங்களின் விளைத்திறன் மிக்க நடைமுறைப்படுத்தல் தொடர்பில் எட்டிய தேர்ச்சி, மற்றும் 2) GSP+ உரையாடலுக்கு வழிநடத்தும் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளை எதிர் கொள்வதற்கு நாடு ஒன்றினால் எடுக்கப்பட்ட கடும் நடவடிக்கைகளை பிரதிபலிக்கும்.

## GSP+ உரையாடல்

குறைபாடுகளை எதிர் கொள்வதற்கும், சிக்கல்களை கலந்துரையாடி, தேர்ச்சியினை எட்டுவதற்கும் பரஸ்பர நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றின் அடிப்படையில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பயனாளி நாடுகளுக்கு இடையிலான நெருக்கமான ஈடுபாட்டினை "உரையாடல்" என்பது விளக்குகின்றது. சிவில் சமூகம், உள்நாட்டு அல்லது பிராந்திய அரசாங்க அதிகாரிகள், வர்த்தக, அத்துடன் மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் உரிமைகள் நிறுவனங்கள் போன்ற சர்வதேச சாசனங்களின் கண்காணித்தல் அங்கங்களுக்கு அப்பால் பரந்தளவிலான மூலங்களினை உரையாடல் பயன்படுத்திக் கொள்கின்றது. உள்நாட்டு, பிராந்திய மற்றும் மத்திய அதிகாரிகள் தமது உறுதி மொழிகளை எட்டுவதற்கு உதவும் வகையில் உள்நாட்டு செயற்பாட்டாளர்களின் ஆக்கபூர்வமான வகிபாகத்தினை விஸ்தரிப்பதில் உரையாடல் பிரதான பங்கு வகிக்கின்றது.




# இலங்கை: GSP+ பெறுகை மற்றும் இழத்தல்

GSP+ திட்டம் ஆரம்பிக்கப்பட்டது முதல் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலையான GSP+ இன் பயனாளிகளில் ஒருவராக இலங்கை உள்ளது. 2005ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் திகதி முதல் GSP+இன் பயன்களையும் இலங்கை பெற ஆரம்பித்தது. எவ்வாறாயினும், 2010ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி, இலங்கையின் GSP+ அந்தஸ்தினை ஐரோப்பிய ஒன்றியமானது இரத்துச் செய்தது. GSP+ பயன்கள் பெறுவதில் இருந்து இலங்கையை நீக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானமானது, சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சாசனம் (ICCPR), சித்திரவதைக்கு எதிரான சாசனம் (CAT) மற்றும் சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான சாசனம் (CRC) ஆகிய மூன்று ஐ.நா மனித உரிமைகள் சாசனங்களின் நடைமுறைப்படுத்தல் தொடர்பில் குறைபாடுகளை அடையாளம் கண்ட ஆணைக்குழு விசாரணையின் முடிவுகளின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது.[3]

# இலங்கையின் பொருளாதாரத்தில் GSP+ இன் விளைவுகள்


GSP+ இல் குறுகிய காலமே இலங்கை பங்குபற்றியிருந்த போதிலும், இந்த திட்டத்தின் பங்குபற்றல் நாடுகள் தொடர்பில் அண்மையில் நடத்தப்பட்ட பகுப்பாய்வுகளில், GSP+ இனால் அதிகளவு பயன் பெற்ற நாடுகளில் ஒன்றாக இலங்கை அடையாளம் காணப்பட்டுள்ளது.[4] உண்மையில், இலங்கை மீது GSP+ இன் பாரிய பொருளாதார தாக்கங்கள் உடனடியாக வெளிப்படுத்தப்பட்டன. இலங்கையானது GSP+ அந்தஸ்தினை பெற்று ஒரு வருடத்திற்குள், ஐரோப்பிய ஒன்றியமானது நாட்டின் பாரிய ஏற்றுமதி சந்தையாக வடஅமெரிக்க சந்தை பிராந்தியத்தை (North American Free Trade Agreement (NAFTA) மாற்றியமைத்தது.[5] ஐக்கிய அமெரிக்க சந்தையின் நிதி நெருக்கடி மற்றும் அதன் விளைவான சுருக்கம் என்பவற்றின் போது இலங்கைக்கு மிகவும் முக்கியமானதாக ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளுடனான அதிகரித்து வரும் நெருக்கமானது இருந்தமை நிரூபிக்கப்பட்டது. ஐக்கிய அமெரிக்க பொருளாதார நெருக்கடியின் விளைவாக இலங்கையானது குறிப்பிட்டளவு இழப்பினை பதிவு செய்த போதிலும், இதன் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் தளம்பல் இன்றி இருந்தது.

**உரு 1: இலங்கையின் 2015ஆம் ஆண்டு ஏற்றுமதிகள்**




மூலம்: ஐரோப்பிய ஆணைக்குழு

## உரு 2: ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இலங்கையின் ஏற்றுமதிகள்





மூலம்: ஐரோப்பிய ஆணைக்குழு [illegible]

GSP+ இரத்துச் செய்யப்பட்டது முதல், ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கையின் ஏற்றுமதிகள் தொடர்ச்சியாக அதிகரித்தன (உரு 1ஐப் பார்க்க), ஆனால் வளர்ச்சி வீதமானது வீழ்ச்சி கண்டிருந்தது (உரு 2ஐப் பார்க்க). GSP+ இல் இலங்கையின் பங்குபற்றலின் போது, ஐரோப்பிய ஒன்றிய பிராந்தியத்திற்கான அதன் ஏற்றுமதியின் பங்கானது 28 வீதத்தில் இருந்து 39 வீதமாக முன்னேற்றகரமாக அதிகரித்திருந்தது. ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கையின் ஏற்றுமதியின் பெறுமதியானது 2004ஆம் ஆண்டில் (GSP+ அறிமுகப்படுத்துவதற்கு முந்தைய வருடம்) 1.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்பதிலிருந்து 2009ஆம் ஆண்டில் (GSP+ நிறுத்தப்படுவதற்கு முந்தைய வருடம்) 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்திருந்தது.[6]

GSP+ இற்கு முன்பதாக (2001-2004) ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதிகளின் இலங்கையின் சராசரி வருடாந்த வளர்ச்சியானது 11.5 வீதமாகும்.[7] GSP+ காலப்பகுதியில் (2005-2009) அந்த அளவானது 16.4 வீதமாக அதிகரிப்பைக் காட்டியது. GSP+ இரத்துச் செய்யப்பட்டது முதல், இந்த அளவானது மீண்டும் வீழ்ச்சி காணத் தொடங்கியது. 2010ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 7.4 வீதமாக இந்த அளவு பதிவாகியிருந்தது (உரு 3ஐப் பார்க்க).


**உரு 3: ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கையின் ஏற்றுமதியின் வருடாந்த வளர்ச்சி சராசரி**




மூலம்: பிலிக்ஸ் ஏ. வெள்ளைப்போ. GSP+ இரத்துச் செய்யப்பட்டதன் பின்னர் ஆடை உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள், தொடர்பான கருத்தரங்கு, இலங்கையின் ஐரோப்பிய ஒன்றிய வர்த்தக சம்மேளனம் (ECCSL)

GSP+ அந்தஸ்தானது, ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளுக்கு நாட்டின் ஏற்றுமதிகளில் அண்ணளவாக 60 வீதத்தினை கொண்டிருந்த, இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் சுமார் 40 வீதமாக இருந்த இலங்கையின் ஆடை ஏற்றுமதிகளில் பெரும் தாக்கம் புரிந்தது (உரு 3ஐப் பார்க்க).[13] GSP+ இன் விளைவுகளின் பெரும் பங்கினால், ஐரோப்பிய ஒன்றியம், கொள்கை கற்கைகளுக்கான கல்வி நிறுவனத்திற்கு அமைய, 2008ஆம் ஆண்டு முதல் இலங்கையின் ஆடை இறக்குமதிகளுக்கான பாரிய சந்தையாக ஐரோப்பிய ஒன்றியம் மாறியது.[14]

**உரு 4: 2015இல் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கையின் ஏற்றுமதிகள**




மூலம்: ஐரோப்பிய ஆணைக்குழு

இலங்கையானது GSP+ வரிச் சலுகை அந்தஸ்தினைப் பெறுவதற்கு முன்னர், நியம GSP வரிச் சலுகையின் ஊடாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கான தமது ஏற்றுமதிகள் பெரும்பான்மையானவற்றிற்கு விருப்பத்துக்குரிய வரிச் சலுகையை இலங்கை ஏற்கனவே அனுபவித்துக் கொண்டிருந்தது. எவ்வாறாயினும், நிலையான GSP வரிச் சலுகை நிகழ்ச்சியானது பரந்தளவு பொருட்களுக்கு இலங்கைக்கு குறைந்தளவு வரிச் சலுகை வீதங்களை வழங்கிய போதிலும், இவற்றில் பெரும்பாலான பொருட்களின் மீதான வரியை GSP+ ஆனது முழுமையாக அகற்றி, மேலும் பரந்தளவு உள்ளீர்ப்பை (கூருணர்வு மிக்க பொருட்கள் உள்ளடங்கலாக) மற்றும் விருப்பத்தெரிவு இடைவெளிகளை வழங்கியது. 2008 ஆம் ஆண்டு மற்றும் 2010ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில்[8], உதாரணமாக, ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கையின் ஏற்றுமதிகளின் மொத்த பெறுமதியானது 29 வீதமாகும், நிலையான GSP மற்றும் GSP+ திட்டங்களின் கீழ் அதே வரிச்சலுகை வீதத்தினை பெற்றிருந்தது: எவ்வாறாயினும், இந்த காலப்பகுதியில் ஏற்றுமதிகளின் அரைவாசியானது, இரண்டு திட்டங்களுக்கும் இடையிலான 5 வீதம் மற்றும் 10 வீதத்திற்கு இடையிலானதாக இருந்தது.[9]

வரிச்சலுகை வீதத்தில் குறிப்பிடத்தக்க வேறுபாட்டுடன், வர்த்தக விருப்பத் தெரிவுகளின் இலங்கையின் பயன்பாடானது, GSP+ அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்தது. 2003 ஆம் ஆண்டில் 42 வீதம் என்பதிலிருந்து, 2008 ஆம் ஆண்டில் 72 வீதமாக இந்தப் பயன்பாடு அதிகரித்தது.[10] 2010 ஆம் ஆண்டில் GSP+ இரத்துச் செய்யப்பட்டது முதல், வரிச்சலுகை விருப்பத் தெரிவுகளின் பயன்பாடு மீண்டும் வீழ்ச்சி கண்டது.[11] GSP+ இன் மூல உற்பத்தி சவாலுக்குட்படுத்தும் விதிகளை, GSP+ இன் கீழான குறைந்தளவு பயன்பாட்டுக்கு வழிகோலிய விடயமாக சில பகுப்பாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.[12] ஏற்றுமதிகளின் உற்பத்திக்கு மூல விதிகள் விதிக்கும் உயர்ந்தளவு கட்டணங்களினால், GSP+ இன் பயன்கள் இந்த தேவைகளை செய்யும் செலவுகளினால் களைந்து விடுவதாக பெரும்பாலான இலங்கை வர்த்தகங்கள் கணக்கிடுகின்றன.



# GSP+ இனை மீளப் பெறல் மற்றும் பேணுதல்

GSP+ திட்டத்திற்கு இலங்கை மீள பிரவேசிப்பது தொடர்பில் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் அண்மையில் நம்பிக்கை வெளியிட்டிருந்தார்: கடந்த வருட காலப் பகுதியில் GSP+ நிபந்தனைகளை நிறைவேற்றுவதனை நோக்கி "குறிப்பிடத்தக்க தேர்ச்சியை நாடு எட்டியுள்ளது என்ற அம்சத்தின் விளைவாக தூதுவரால் இந்த நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.[15] இந்த முன்னேற்றங்கள் முக்கியமானவை. GSP+ இனை வழங்குவதற்கு முன்னர் தேவையான சாசனங்களின் நடைமுறைப்படுத்தலுடன் சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களும் அடையாளப்படுத்தப்பட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் வேண்டுவதில்லை. ஆனால், இந்த பெறுபேறுகளை எட்டுவதற்கான அர்ப்பணிப்பினை நாடு வெளிப்படுத்த வேண்டும். அத்துடன், தொடர்ந்து அதனை நோக்கி முன்னேறிச் செல்லவும் வேண்டும்.[16] புதிய அரசாங்கம் ஒன்று நியமிக்கப்பட்டதால் மாத்திரம், GSP+ ஆனது மீண்டும் எளிதாக வழங்கப்படாது என்பதில் துதுவர் தெளிவாக இருக்கின்றார். திட்டத்தின் தேவைகளை நிறைவேற்றுவதனை நோக்கிய இலங்கையின் தேர்ச்சியுடன் சம்பந்தப்பட்ட "புறநிலை காரணங்கள்" என்பதன் அடிப்படையில் மாத்திரம் GSP+ வழங்கப்படும்.[17] இலங்கை முன்னர் GSP+ பங்குபற்றுனராக இருந்த போதினை விட கடுமையானதாக மாறும் வகையில், 2014ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியம் இந்த தேவைகளை புதுப்பித்தது.



# GSP+ இற்கான புதுப்பிக்கப்பட்ட நிபந்தனைகள்[18]

1 பயனாளி நாடுகளுடன் தொடர்ச்சியான உரையாடல் வழிகளால் மற்றும் 2 வருடங்களுக்குப் பதிலாக மூன்று வருடங்களுக்கு ஒரு முறை அறிக்கைகளை கட்டாயப்படுத்துவதன் மூலமும் ஐரோப்பிய ஆணைக்குழுவினால் கண்காணித்தல் பரவலாக்கப்பட்டுள்ளது. தற்போது ஐரோப்பிய ஒன்றிய பேரவையினால் மாத்திரமன்றி, ஐரோப்பிய பாராளுமன்றத்தினாலும் கண்காணித்தல் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

2 எவ்வித ஒதுக்கீடுகளும் இன்றி, தமது அறிக்கைப்படுத்தல் கடப்பாடுகள் உள்ளடங்கலாக, சர்வதேச கண்காணித்தல் அங்கங்களுடன் பயனாளி நாடுகள் முழுமையாக ஒத்துழைத்தல் வேண்டும்.

3 மீளப்பெறல் பொறியமைப்புக்கள் குறிக்கோள் சார்ந்தவை. சர்வதேச கண்காணித்தல் அங்கங்களின் அறிக்கைகளை பொருந்துவதற்கு, நேர்த்தியான தகவலுக்கான வேறு மூலங்களை ஐரோப்பிய ஒன்றியம் பயன்படுத்தலாம். அத்துடன், சுமையின் ஆதாரம் மாற்றப்பட்டுள்ளது: சாட்சியமானது நடைமுறைப்படுத்தலுடன் பிரச்சினைகளை குறிக்கும் போது, சாதகமான அறிக்கையை வெளிப்படுத்த வேண்டியது பயன் பெறும் நாட்டின் பொறுப்பாகும்.

# GSP+ இல் பங்குதாரர்களின் வகிபாகம்

GSP+ இற்கு புதுப்பிக்கப்பட்ட நிபந்தனைகளின் விளைவாக, சிவில் சமூகம், வர்த்தக சமுதாயம் மற்றும் வேறு உள்நாட்டு பங்குதாரர்கள், ஐரோப்பிய ஆணைக்குழுவின் ஆண்டுக்கு இருமுறை நிகழ்கின்ற அறிக்கைகளில் "மூன்றாம் தரப்பு" மூலங்கள் என்ற அத்தியாவசிய பங்கினை தற்போது வகிக்க முடியும். இந்த பல்வகை பங்குதாரர்கள் [GSP+ செயற்பாட்டிற்கு, 1) அரச அதிகாரிகள் உடன்படிக்கையின் பொறுப்புக்களை எவ்வாறு பூர்த்தி செய்கின்றனர் என்பதனை கண்காணித்தல், 2) முன்னேற்றத்திற்காக ஆதரவு நாடல், மற்றும் 3) இலங்கை மக்களின் எண்ணங்களை தொடர்பாடல் செய்யும் இடைத்தரகர்களாக செயற்படுதல் ஆகியவற்றின் மூலம் பங்களிக்க முடியும்.

| செயற்பாட்டாளர் | கண்காணித்தல் | ஆதரவு நாடல் | தொடர்பாடல் |
|---|---|---|---|
| சமூகம் | ■ கற்பனை செய்யப்பட்டது போல கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா என கண்காணித்தல் மற்றும் பின்தொடரல்.<br><br>■ கொள்கை தாக்கத்தை ஆராய்ந்து, வெற்றியை, குறைபாடுகளை மற்றும் மேம்படுத்தப்பட வேண்டிய பிரிவுகளை அடையாளம் காணல்.<br><br>■ தீர்மானம் எடுத்தல் செயற்பாடுகள் வெளிப்படையானதா, ஜனநாயகமானதா மற்றும் பங்கேற்றல் சார்ந்ததா என பின்தொடருதல். | ■ குறிப்பிட்ட குழுக்களின் சிக்கல்கள் அல்லது அக்கறைகளை எழுப்புதல், மற்றும் கொள்கைகளை வடிவமைத்தல் என்ற அடிப்படையில் அவர்களின் தேவைகளுக்காக ஆதரவு நாடல்.<br><br>■ தெரிவுகள் மற்றும் தீர்வுகள் உள்ளடங்கலாக, குறிப்பிட்ட கொள்கை பிரேரணைகள் தொடர்பில் அதிகாரிகளுக்கு ஒப்பீடு சார் நிபுணத்துவத்தை வழங்கல். | ■ துண்டு பிரசுரங்கள், சமூக ஊடகம், மற்றும் பொது நிகழ்வுகளைப் பயன்படுத்தி கொள்கை பிரேரணைகளின் சாத்தியமான தாக்கம் குறித்து பொது மக்கள் மற்றும் தீர்மானம் எடுப்பவர்களுக்கு தெரிவித்தல்.<br><br>■ ஐக்கிய நாடுகள் சாசனங்களினை பின்பற்றல் மற்றும் GSP+ இன் பயன்களுக்கு இடையிலான தொடர்பு குறித்து விழிப்புணர்வை அதிகரித்தல். |

| | | | |
|---|---|---|---|
| | ■ வாழ்வாதாரத்தில் GSP+ இன் எந்தவொரு தாக்கத்தையும் கண்காணிப்பதற்கு பயனாளிகளுடன் பணியாற்றல். | ■ வர்த்தகங்கள், மனித உரிமைகள் காப்பாளர்கள், தொழிற்சங்கங்கள், ஊடகம், சுயாதீன அங்கங்கள், மற்றும் ஏனையோருடன் GSP+ சாசனங்களுடன் சம்பந்தப்பட்ட திருத்தத்தின் பிரதான பகுதிகளை அடையாளம் காண்பதற்கு பல்-பங்குதாரர் தளங்களை ஒழுங்கமைத்தல். | ■ இலங்கையின் ஐக்கிய நாடுகளின் அறிக்கைகள், நிறைவு அவதானிப்புக்கள் மற்றும் உடன்படிக்கை அங்கங்களின் பரிந்துரைகளையும், ஏனைய சம்பந்தப்பட்ட சர்வதேச அறிக்கைகளையும் பொது மக்களுக்கு பகிரங்கப்படுத்தல். |
| வர்த்தகச் சமூகம் | ■ வர்த்தகச் செயற்பாடுகளை தாமதப்படுத்தும் மற்றும் ஏன் கொள்கைகள் மீளமைக்கப்படல் வேண்டும் என்பதனை விளக்குவதற்கு ஆதாரங்களை வழங்குவதில் தடைகளை அடையாளம் காணல்.<br><br>■ சுற்றுச்சூழல், மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் சம்பந்தப்பட்ட கொள்கைகளை அதிகாரிகள் எவ்வாறு நடைமுறைப்படு-த்துகின்றனர் என்பதனை கண்காணிப்பதற்கு சிவில் சமூகம் மற்றும் வேறு சமூகப் பங்காளர்களுடன் இணைந்து செயற்படல். | ■ வர்த்தகங்களிற்கு உகந்த கொள்கைகளை நடைமுறைப்படுத்து வதற்கு மற்றும் ஊழலை மற்றும் தொழில் வலுவின் துஷ்வபிரயோகங்களை தடுப்பதற்கான நடவடிக்கைகள் போன்ற. உடன்படிக்கை பொறுப்புக்களை பூர்த்தி செய்வதற்கு அரசாங்கத்திடம் ஆதரவு நாடி செல்லல்.<br><br>■ பரிந்து பேசலுக்கு பரந்தளவு கூட்டணியை உருவாக்குவதற்கு சிவில் சமூகம் மற்றும் வேறு சமூகப் பங்காளர்களுடன் இணைந்து பணியாற்றல். | ■ வர்த்தக உற்பத்திகள், தொழிற்றுறைகளுக்கான GSP+ இன் பயன்கள் மற்றும் தொழில் உருவாக்கல் தொடர்பில் திட்டத்தின் சாதகமான தாக்கம் குறித்து பொது மக்கள் மற்றும் அதிகாரிகளுக்கு அறிக்கைப்படுத்தல்.<br><br>■ ஐக்கிய நாடுகள் சாசனங்களுடன் சம்பந்தப்பட்ட தேசிய மட்ட கொள்கைகளை எட்டுவதற்கு வர்த்தகங்கள் எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் அதிகாரிகள் மற்றும் பொது மக்களுக்கு அறிவித்தல். |

கொள்கை நடைமுறைப்படுத்தல் மற்றும் திருத்தம் தொடர்பான பிரதான பிரிவுகளில் இலங்கை அதிகாரிகளுக்கு உதவுவதன் மூலம் ஆக்கப்பூர்வமான வகிபாகங்களை சிவில் சமூகம் மற்றும் வர்த்தக சமூகங்கள் வகிக்க முடியும். ஏனைய GSP+ பயனாளி நாடுகளின் அனுபவத்தினால் இந்த வகிபாகத்தின் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்திக் காட்ட முடியும். உதாரணமாக, ஆர்மேனியாவைச் சேர்ந்த அரசாங்க அதிகாரிகள் சிவில் சமூகத்துடன் இணைந்து 2014-2016 இற்கான மனித உரிமைகள் பாதுகாப்பு தொடர்பான தேசிய உபாயத்தின் நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணித்தலில் ஈடுபட்டதுடன், ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சாசனத்தின் கீழ் ஆர்மேனியாவின் உறுதிமொழிகளிற்குள் ஊழலைத் தடுப்பதற்கு விசேட நடவடிக்கைகள் தொடர்பில் வர்த்தகச் சமூகங்கள் பணியாற்றின.[19] அதேவேளை, ஜோர்ஜிய அதிகாரிகள் தற்போது சிவில் சமூகத்தின் நெருக்கமான ஒத்துழைப்புடன் 2016-2017 இற்கான மனித உரிமைகள் செயற்பாட்டு திட்டத்தினை தயாரித்து வருகின்றன.[20] பாகிஸ்தானில், மேலும், சிவில் சமூக நிறுவனங்களும் வர்த்தகச் சமூகத்தின் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து முன்னெடுத்துச் செல்வதற்கு முன்னுரிமை மனித உரிமைகள் திருத்தங்கள் அடையாளம் காண்பதற்கு GSP+ மற்றும் அதன் நிபந்தனைகளை கலந்துரையாடுவதற்கு அரசாங்கத்துடன் பல்தரப்பு உரையாடல்களில் (DRI இனால் வசதியளிக்கப்பட்ட) பங்குபற்றுவதற்கு அண்மைக் காலமாக ஆரம்பித்துள்ளனர்.[21]

GSP+ அந்தஸ்தின் பிரதான பயனாளி ஒருவர் என்ற வகையில், திட்டத்தின் நிபந்தனைகளை எட்டுவதற்கு இலங்கைக்கு உதவுவதற்கு வர்த்தக சமூகமானது தமது ஆர்வத்தினை வெளிப்படுத்தியுள்ளது. 1) தொழிற்சாலைகளிலும் மற்றும் வேலை செய்யும் இடங்களிலும் தொழிலாளர் தரங்களுக்கு முழுமையை உறுதி செய்தலுக்கு மேலதிகமாக, அத்துடன், 2) கூட்டுறவு சமூக பொறுப்புணர்வின் ஊடாக நாட்டின் மனித உரிமைகளின் மேம்படுத்தலுக்கு பங்களித்தல், இலங்கையின் வர்த்தகச் சமூகமானது, 3) மனித உரிமைகளின் பரவலான பாதுகாப்பிற்கு வலியுறுத்துவதற்கு அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றல். இலங்கையானது GSP+ இனை பேணுவதற்கு ஐரோப்பிய ஒன்றியமானது நிபந்தனைகளை விதித்த சந்தர்ப்பத்தில் 2010ஆம் ஆண்டில் இலங்கையின் வர்த்தக சமுதாயமானது ஏற்கனவே மிகவும் முக்கியமான பரிந்து பேசல் வகிபாகம் ஒன்றினை முன்னெடுத்தது. GSP+ இனை மீளப் பெறுவதற்கான செயற்பாட்டினை விரைவுபடுத்துவதற்கு உரிமைகள் பாதுகாப்பினை பரவலாக்குவதற்கு மீண்டும் அரசாங்கத்தை வலியுறுத்துமாறு இலங்கை வர்த்தகங்களிடம் அண்மையில் ஐரோப்பிய ஒன்றியம் கோரியுள்ளது.22 வர்த்தக சமூகமானது, உதாரணமாக, தேசிய தொழில் கொள்கை மற்றும் திருத்தங்களின் நடைமுறைப்படுத்தல் தொடர்பில் உரையாடல்களை மீள ஆரம்பிக்க முடியும் அல்லது வேலையிடங்களில் ஒன்றிணைந்த பேரம் பேசலை முன்னிறுத்துவதற்கு இலங்கை அதிகாரிகளுடன் பணியாற்ற முடியும்: சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் தற்போதைய சாசனங்களினால் உள்ளடக்கப்பட்ட முக்கியமான விடயங்களை இந்த இரண்டு நடவடிக்கைகளும் கவனத்தில் கொள்ளும்.[23]

# குறிப்புதவிகள்


1 ஐரோப்பிய ஆணைக்குழு, "ஐரோப்பிய ஒன்றியத்தின் விருப்பத் தெரிவுகளுக்கான பொதுமைப்படுத்தப்பட்ட திட்டம் (GSP+), ஏப்ரல் 2014 <http://www.sice.oas.org/TPD/GSP/Sources/EU_GSP_04_2014_e.pdf>

2 ஐரோப்பிய ஆணைக்குழு, "விருப்பத் தெரிவுகளுக்கான பொதுமைப்படுத்தப்பட்ட திட்டம் (GSP+," 30 டிசம்பர் 2013. <http://trade.ec.europa.eu/doclib/press/index.cfm?id=1006>

3 ஆணைக்குழுவின் விசாரணையானது சாசனங்களின் நடைமுறைப்படுத்தலுக்கு சட்ட மற்றும் நிறுவன கட்டமைப்பில் குறைபாடுகளை, சுயாதீன ஆணைக்குழுக்கள் மற்றும் மனித உரிமைகள் நிறுவனங்களில் பலவீனங்களை மற்றும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளில் பரந்தளவு கட்டுப்பாடுகளையும் கண்டறிந்தது. ஐரோப்பிய சமூகங்கள் ஆணைக்குழுவின் "இலங்கையில் குறிப்பிட்ட மனித உரிமைகள் சாசனங்களை வினைத்திறன் மிக்க வகையில் நடைமுறைப்படுத்துவது சம்பந்தப்பட்ட விசாரணையின் முடிவுகள் சம்பந்தப்பட்ட அறிக்கை 2009" பார்க்க. <http://trade.ec.europa.eu/doclib/docs/2009/october/tradoc_145152.pdf>

4 பார்க்க உதா., போனபாஸ் ஒங்குக்லு, "ஐரோப்பிய ஒன்றிய GSP+ திட்டமானது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வர்த்தகத்தை அதிகரிப்பதற்கான பிரதான கருவி ஒன்றாகும், விசேடமாக உலகளாவிய பொருளாதார நெருக்கடியின் போது". வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் மாநாடு, 2010. <http://trade.ec.europa.eu/doclib/docs/2010/march/tradoc_145917.pdf>

5 டீ.ரி. கிங்ஸ்லி பேர்னாட், "ஐரோப்பிய ஒன்றியத்தின் GSP+ திட்டம் இரத்து செய்யப்பட்டதன் பின்னர்: இலங்கையின் ஏற்றுமதிகள் மற்றும் பொருளாதாரம் மீது அதன் தாக்கம் - பொருளாதார அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்வதற்கு நாம் தயாராக உள்ளோமா? த ஐலண்ட், 22 ஆகஸ்ட் 2010. <http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=4997>

6 சுவேந்திரனி ஜயரட்ன, "விருப்பத் தெரிவுகளுக்கான பொதுமைப்படுத்தப்பட்ட திட்டம் (GSP+) மற்றும் இலங்கை பொருளாதாரத்தின் மீது அதன் தாக்கங்கள்," பொருளாதார மீளாய்வு (ஜூன் - ஜூலை 2009). <http://dl.nsf.ac.lk/bitstream/handle/1/14234/ER-35%283-4%29-70.pdf?sequence=2>

7 ஃபீலிக்ஸ் ஏ. பெர்னாண்டோ, " GSP+ இரத்துச் செய்யப்பட்டதன் பின்னர் புடவை உற்பத்தியாளர்களால் எதிர்கொள்ளப்படும் சிக்கல்கள்" ஜி.எஸ்.பீ தொடர்பான கருத்தரங்கு, இலங்கையின் ஐரோப்பிய வர்த்தகச் சம்மேளனம் (ECCSL) "இலங்கை GSP+ மீளப் பெற முடியுமா?", 2015ஆம் ஆண்டு மார்ச் 23.

8 இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, "திரட்டப்படாத ஏற்றுமதி செயற்பாடு 2005-2014." <http://stat.srilankabusiness.com/epi2015/pdf/Pg%28014-019%29-%20Dissag.%20Export%20Performance%202005%20-%202014.pdf மற்றும் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுக் குழு. "வர்த்தகம்". <http://eeas.europa.eu/delegations/sri_lanka/eu_sri_lanka/trade_relation/index_en.htm>

9 கொள்கை கற்கைகளுக்கான கல்வி நிறுவனம், "இலங்கை: பொருளாதாரத்தின் நிலை 2008", 2008. <http://www.ips.lk/publications/state_of_economy_report.html>

10 மெத்யு ஸ்னைடர், " GSP+ மற்றும் அபிவிருத்தி: தலைகீழற்ற விருப்பத் தெரிவுகளின் வினைத்திறனை அதிகரித்தல்," சர்வதேச சட்டத்தின் மிச்சிகன் சஞ்சிகை, பதிப்பு 33, இல. 4 (2012).

11 பொதுநலவாய செயலகம் மற்றும் வெளிநாட்டு அபிவிருத்தி கல்வி நிறுவனம், "ஐரோப்பிய ஒன்றிய விருப்பத் தெரிவுகளுக்கான பொதுமைப்படுத்தப்பட்ட முறை ஆட்சியில் மாற்றங்கள்: இலங்கைக்கான சம்பந்தப்படுத்தல்கள்", வரைபு அறிக்கை. இலண்டன்: வெளிநாட்டு அபிவிருத்தி கல்வி நிறுவனம், 2012, அசானி அபேசேகரவின், " GSP+ நீக்கல் மற்றும் இலங்கையில் புடவைத் தொழிற்றுறை: விளைவுகள் மற்றும் முன்னோக்கிய பாதை, தெற்காசிய பொருளாதார சஞ்சிகை பதிப்பு 14, இல. 2 (2013)இல் குறிப்பிட்டவாறு. <http://sae.sagepub.com/ content/14/2/293.abstract>

12 தோ'ால் டி மெல், சுவேந்திரனி ஜயரத்ன மற்றும் தர்'னி பிரேமரத்ன, "இலங்கையில் வர்த்தக உடன்படிக்கைகளின் பயன்பாடு: ஏற்றுமதியாளர்கள் எதிர். புள்ளிவிபரவியல் ஒழுங்குகளின் அளவீடுகள் சார்ந்த எண்ணக்கருக்கள்," வர்த்தக பணி கட்டுரைத் தொடரின் ஆசிய-பசுபிக் ஆய்வு மற்றும் பயிற்சி வலையமைப்பு, இல 96, மார்ச் 2011. <http://www.unescap.org/resources/utilization-trade-agreements-sri-lanka-perceptions-exporters-vs-statistical-measurements>. அத்துடன் பார்க்க, ஜனக்க விஜயசிறி, "விருப்பதெரிவு வர்த்தக உடன்படிக்கைகளின் பயன்பாடு: ஐரோப்பிய ஒன்றிய மற்றும் அமெரிக்க GSP+ திட்டங்களுடன் இலங்கையின் அனுபவங்கள" வர்த்தக பணி கட்டுரைத் தொடரின் ஆசிய-பசுபிக் ஆய்வு மற்றும் பயிற்சி வலையமைப்பு, இல 29, ஜனவரி 2007. <http://www.unescap.org/sites/default/files/AWP%20No.%2029.pdf>

13 அபயசேகர, "GSP+, நீக்கம் மற்றும் புடவைத் தொழிற்றுறை"

14 ஜோஸ் அன்சன் மற்றும் மார்க் பக்கெட்டா, "புடவைகள் மற்றும் ஆடைகளின் டுனுஊஇற்கு தலைகீழற்ற விருப்பத் தெரிவுகள்" 2005 என்பது பெட்ரிக் லோ, ரொபேர்டா பைமார்டினி மற்றும் ஜுர்கென் ரிக்டரிங்இன், "NAMAஇல் தலைகீழற்ற விருப்பத்தெரிவுகளின் அழிவிற்கான பல்துறை தீர்வுகள" உலக வர்த்தக நிலையம், 16 மே 2008இல் குறிப்பிடப்பட்டுள்ளது <http://siteresources.worldbank.org/ INTTRADERESEARCH/Resources/544824-1235150721870/ch07_Low_Piermartini_Richtering_Multilateral_ Solutions_to_Erosion_Pref_NAMA.pdf>

15 ஜி.எஸ்.பிஇனை இலங்கை மீண்டும் பெறவுள்ளது "டேலிஇ" டெய்லி நியூஸ், 25 ஜனவரி 2016. <http://www.dailynews.lk/?q=2016/01/25/ business/lanka-track-regain-gsp-daly>

16 GSP+ இனை பெறும் பாதையில் இலங்கை, மேலும் பூர்த்தி தன்மை வேண்டும்: ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள்" எக்கனமி டெக்ஸ்ட், 22 ஜனவரி 2016.

17 GSP+ மீள அளிக்கப்படுவதற்கு மேம்படுத்தப்பட்ட மனித உரிமைகளுக்கு இலங்கை வர்த்தகங்கள் ஆதரவு நாட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் தெரிவிக்கின்றார்", தமிழ் கார்டியன் <http://www.economynext.com/Sri_Lanka_on_track_to_get_GSP+,_more_compliance_needed__EU_ officials-3-4058-10.html>

18 ஐரோப்பிய ஆணைக்குழு, "விருப்பத்தெரிவுகளுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுமைப்படுத்தப்பட்ட திட்டம் (GSP+)" ஏப்ரல் 2014.

19 ஐரோப்பிய ஆணைக்குழு, "இணைந்த ஊழியர் பணியாற்றல் ஆவணம்: '2014-2015 காலப்பகுதியை உள்ளடக்கி நிலைபேறான அபிவிருத்தி மற்றும் நல்லாட்சிக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் விசேட ஊக்குவிப்பு ஒழுங்குகள்". 28 ஜனவரி 2016: 20, 35-36. 131.

20 ஐரோப்பிய ஆணைக்குழு, "இணைந்த ஊழியர் பணியாற்றல் ஆவணம்: 131.

21 Democracy Reporting International, " GSP+ பங்குதாரர் மன்றம் பாகிஸ்தான்" 22 ஏப்ரல் 2016 <http://democracy-reporting.org/?p=1440>

22 "GSP+ மீண்டும் வழங்கப்படுவதற்கு மேம்படுத்தப்பட்ட மனித உரிமைகளுக்காக இலங்கை வர்த்தகங்கள் ஆதரவு நாடல் வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் தெரிவிக்கின்றார்," தமிழ் கார்டியன்.

23 அவதானிப்புக்களை பார்க்க (CEACR)இ 2015இல் உள்வாங்கப்பட்டது, 105வது ஐடுஊ அமர்வில் பிரசுரிக்கப்பட்டது (2016), ஒழுங்கமைத்தல் மற்றும் ஒன்றிணைந்த பேரம் பேசல் சாசனத்திற்கான உரிமை, 1949 (இல. 98) - இலங்கை (ஏற்புறுதி: 1972). <http://www.ilo.org/dyn/normlex/en/f?p=NO RMLEXPUB:12100:0::NO::P12100_INSTRUMENT_ID:312243>

Federal Republic of Germany
Foreign Office

ஜெர்மனி வெளிவிவகார அலுவலகத்தின் உதவியுடன் இந்த பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இந்த பதிப்பில் உள்ள உள்ளடக்கங்கள் யாவும் Democracy Reporting Internationalஇன் ஏகவுரிமை கொண்டதாகும். ஜெர்மனி வெளிவிவகார அலுவலகத்தின் எண்ணங்களை பிரதிபலிப்பதாக எடுத்துக் கொள்ளப்படக் கூடாது.

Photo credit page 5: Valerii Iavtushenko / Shutterstock.com

# GSP+ சலுகை தொடர்பான 27 சர்வதேச சமவாயங்கள்

01 சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயம் (1966)
International Covenant on Civil and Political Rights (ICCPR)

02 சமூக, பொருளாதார, கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயம் (1966)
International Covenant on Economic Social and Cultural Rights (ESCR)

03 சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயம் (1989)
Convention on the Rights of the Child (CRC)

04 பெண்களுக்கு எதிரான அனைத்துப் பாகுபாடுகளையும் இல்லாதொழிப்பதற்கான சர்வதேச சமவாயம் (1979)
Convention on the Elimination of All Forms of Discrimination against Women (CEDAW)

05 சித்திரவதைக்கு அல்லது ஏனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற, இழிவாக நடத்துதலுக்கு எதிரான சமவாயம் (1984)
Convention against Torture and other Cruel, Inhuman or Degrading Treatment or Punishment (CAT)

06 அனைத்து விதமான இனப்பாகுபாடுகளையும் இல்லாதொழிப்பது பற்றிய சர்வதேச சமவாயம் (1965)
International Convention on the Elimination of All Forms of Racial Discrimination

07 இனப்படு கொலைக் குற்றங்களுக்கு தண்டனை வழங்கல் மற்றும் அதை தடுப்பது தொடர்பான சமவாயம் (1948)
Convention on the Prevention and Punishment of the Crime of Genocide

08 தொழில் நியமனத்திற்கான குறைந்தபட்ச வயது தொடர்பான அளவுகோல்கள் தொடர்பான சமவாயம் (1973)
Convention concerning Minimum Age for Admission to Employment

09 மோசமான வடிவத்திலான சிறுவர் தொழிலை நீக்குதல் மற்றும் அது குறித்துத் துரித நடவடிக்கை மேற்கொள்ளல் தொடர்பான அளவுகோல்கள் (1999)
Convention concerning the Prohibition and Immediate Action for the Elimination of the Worst Forms of Child Labor

10 பலவந்தமாக உழைப்பைப் பெறுவதைத் நீக்குவது தொடர்பான சமவாயம் (1957)
Convention concerning the Abolition of Forced Labor

11 பலவந்தமாக அல்லது கட்டாய உழைப்பைப் பெறுவதைத் தடுப்பதற்கான சமவாயம் (1930)
Convention concerning Forced or Compulsory Labor

12 சம பெறுமதி கொண்ட உழைப்பிற்காக, ஆண் - பெண் இரு பிரிவினருக்கும் சமமான ஊதியங்களை உறுதிப்படுத்துவது பற்றிய சர்வதேச சமவாயம் (1951)
Convention concerning Equal Remuneration of Men and Women Workers for Work of Equal Value

13 தொழில் மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பில் நிலவும் பாரபட்சம் தொடர்பான சமவாயம் (1958)
Convention concerning Discrimination in Respect of Employment and Occupation

14 ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தையும் ஒருங்கு சேர்வதற்கான உரிமையையும் பாதுகாப்பது பற்றிய சமவாயம் (1948)
Convention concerning Freedom of Association and Protection of the Right to Organize

15 ஒன்று சேர்வதற்கான சுதந்திரத்தையும் கூட்டாகப் பேரம் பேசுவதற்கான உரிமை தொடர்பான கோட்பாடுகளையும் உறுதிப்படுத்துவதற்கான சமவாயம் (1949)
Convention concerning the Application of the Principles of the Right to Organize and to Bargain Collectively

16 இன, நிறவெறி குற்றத்தைத் தடுக்கும், மற்றும் அடக்குமுறை தொடர்பான சர்வதேச சமவாயம் (1972)
International Convention on the Suppression and Punishment of the Crime of Apartheid

17 ஓசோன் படலத்திற்குப் பாதிப்பு ஏற்படுத்தும் பொருட்கள் தொடர்பான மொன்றியல் இராஜதந்திர கோட்பாடு (1987)
Montreal Protocol on Substances that deplete the Ozone Layer (Montreal Protocol)

18 சர்வதேச எல்லைகளுக்கு இடையில் அபாயகரமான கழிவுப்பொருட்களை நகர்த்தல் மற்றும் அவ்வாறான கழிவகற்றலை கட்டுப்படுத்தல் தொடர்பான பெசல் சமவாயம் (1989)
Basel Convention on the Control of Trans boundary Movements of Hazardous Wastes and their Disposal (Basel Convention)

19 நிலையான இயல்புடைய இயற்கைச் சூழலை மாசுபடுத்தல் தொடர்பான (ஸ்டொக்ஹொம்) சமவாயம் (2001)
Stockholm Convention on Persistent Organic Pollutant (Stockholm Convention)

20 ஆபத்துக்குள்ளாகியுள்ள வன மற்றும் தாவர உயிரினங்களை சர்வதேச ரீதியில் வர்த்தகம் செய்வது தொடர்பான சர்வதேச சமவாயம் (1973)
Convention on International Trade in Endangered Species of Wild Fauna and Flora

21 உயிரியல் பல்மைத்துவம் குறித்த சமவாயம் (1992)
Convention on Biological Diversity

22 உயிரியல் பாதுகாப்புத் தொடர்பான கார்டகெனா இராஜதந்திர ஒழுங்குமுறை (2000)
Cartagena Protocol on Bio safety (Cartagena Protocol)

23 காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் கட்டமைப்பின் சமவாயத்திற்கு ஒன்றுசேர்க்கப்பட்ட கியோட்டோ இராஜதந்திர ஒழுங்குமுறை (1998)
Kyoto Protocol to the United Nations Framework Convention on Climate Change (Kyoto Protocol)

24 போதைப் பொருள்கள் உள்ளடங்கியுள்ள மருந்துகள் தொடர்பான ஐக்கியநாடுகள் சபையின் நேரடி சமவாயம் (1961)
United Nations Single Convention on Narcotic Drugs

25 உளவியல் ரீதியான பாதிப்பை ஏற்படுத்தும் பொருட்கள் பற்றிய ஐக்கிய நாடுகளின் சமவாயம் (1971)
United Nations Convention on Psychotropic Substances

26 போதைப் பொருள் உள்ளடங்கியுள்ள மருந்துகள், உளவியல் பாதிப்பை ஏற்படுத்தும் பொருட்களை சட்ட விரோதமாக கடத்தலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் சர்வதேச சமவாயம் (1988)
United Nations Convention against Illicit Traffic in Narcotic Drugs and Psychotropic Substances

27 ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் மெக்சிகோ சமவாயம் (2004)
United Nations Convention against Corruption (Mexico Convention)

## DEMOCRACY REPORTING INTERNATIONAL பற்றி

Democracy Reporting International (DRI) என்பது பக்கச் சார்பற்ற, சுயாதீனமான, இலாப நோக்கத்திற்கு அற்ற ஜெர்மனியின், பேர்லினில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். பிரஜைகளின் அரசியல் பங்குபற்றல், அரச அங்கங்களின் பொறுப்புடைமை, மற்றும் விசேடமாக ஜனநாயக நிலைமாற்றத்தை எதிர்கொண்டிருக்கும் நாடுகளில் ஜனநாயக நிறுவனங்களின் அபிவிருத்தி என்பவற்றை முன்னிறுத்தி DRI செயற்படுகின்றது. GSP+ தொடர்பில் கவனம் செலுத்தும் வெகுசில சர்வதேச செயற்பாட்டளர்களில் ஒன்றாக DRI உள்ளது. குறிப்பாக, மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக திருத்தத்திற்கு ஆதரவளிப்பதற்கு அதன் நிபந்தனைகளைப் பயன்படுத்துகின்றது. GSP+ திட்ட ஊக்குவிப்பின் ஊடாக பரந்தளவு பங்குதாரர் பங்குபற்றலை உருவாக்குவதன் மூலம் இலங்கையில் ஜனநாயக ஒருங்கிணைப்பினையும், முழுமையான சர்வதேச அனுபவத்தை மற்றும் இந்த திருத்த செயற்பாடு குறித்து அறிவிப்பதற்கும் என இரண்டிற்கும் இந்த செயற்றிட்டம் இலக்கு வைத்துள்ளது.

Democracy Reporting International gGmbH
Prinzessinnenstraße 30
10969 Berlin, Germany.
T / +49 30 27 87 73 00
F / +49 30 27 87 73 00-10
info@democracy-reporting.org

Sri Lanka Country Office
15/1 Skelton Gardens
Colombo 05, Sri Lanka.
T/ +94 112 50 7619
srilanka@democracy-reporting.org
www.democracy-reporting.org